1990 மார்ச் 22]

எடப்பாடி தாலுகா அமைத்தல்

*5910 திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சங்ககிரி தாலுகாவை பிரித்து எடப்பாடியை தனி தாலுகா வாக அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சங்ககிரி வட்டத்தை பிரித்து எடப்பாடியை தலைமையிட மாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்தத் தேவையில்லை.

திரு. க. பழனிசுவாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்திற்காக பெரிய தாலுக்காக்கள் இரண்டாகப் பிரிக்கப் படும் என்று அரசு கூறியிருக்கிறது. சங்ககிரி தாலுக்கா, சங்ககிரி, எடப்பாடி ஆகிய இரண்டு தாலுக்காக்களைக் கொண்ட பெரிய தாலுக்காவாக இருக்கிறது. ஆகவே சங்ககிரி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து, எடப்பாடியை தனித் தாலுக்காவாக அரசு பிரிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. நாஞ்சில் மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தந்திருக்கிற விளக்கம் அடிப் படையிலே தவறானது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். தாலுக்காவைப் பிரிக்கவேண்டும் என்ற கருத்தும், முடிவும் இந்த அரசுக்கு இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்த கருத்தை நான் ஏற்க மறுக்கிறேன். காரணம் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் 30—6—1991-ல் முடியும் வரையில் வருவாய்த்துறை நிர்வாக ஆட்சி வரம்புகளில் எவ்வித மாற்றமும் செய்வதற்கு இல்லை என்று தெளிவாக இருக்கிறது. இரண்டா வது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தில், தற்போது 7 உள் வட்டங்களும், பிர்க்காஸ், 72 வருவாய்க் கிராமங்கள் மட்டுமே அமைந்துள்ளன. அதனால் அந்த வட்டத்தைப் பிரித்து எடப்பாடியைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டமாக அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை. மேலும் சங்ககிரி வட்டம் நடுத்தர வட்டமாக இருப்பதால், இவ்வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடித் தொகுதியில் சுமார் இரண்டு இலட்சம் வாக்காளர்களும், சங்ககிரித் தொகுதியில் சுமார் 1,00,060 மக்கள் தொகை கொண்ட பெரிய பேரூராட்சியும் இருக்கிறது. அதோடு எடப்பாடித் தொகுதி எடகணச்சாலை பேரூராட்சியி

லிருந்து சங்ககிரிக்கு வரவேண்டுமானால், 40 கி.மீ. வந்துதான் அலுவலகத்திற்கு வரவேண்டிய சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, இதைக் கருத்திற் கொண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, சங்ககிரி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து, எடப்பாடியைத் தனித் தாலுக்காவாக அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அமைப்பதாக இல்லை.

இந்துசமய அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்பட்ட கோவில்கள்

*3331 பி.திரு. ந. சௌந்திரபாண்டியன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வருமானம் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்பட்ட கோவில்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10,000-க்கு மேல் வருமானம் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட கோயில்கள் 2,120 உள்ளன.

திரு. ந, சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 10,000 ரூபாய் வருமானமுள்ள கோவில்கள் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கோவில்கள் உள்ளன. இவையனைத்தும் தற்போது யாருடைய நிருவாகத்தில் இருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கின்ற கணக்கின்படி ரூபாய் 10,000-த்திற்கும் அதிகமான வருவாய் உள்ள கோவில்கள் 2,120 தான். 10,000 என்று உறுப்பினர் சொன்னால், அப்படிப்பட்டத் தகவல் இந்தத் துறையிடம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 ரூபாய் வருமானத்திற்குட்பட்ட கோவில்களில், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட அறங்காவலர் குழு தற்போது இருக்கிறதா அல்லது தற்போது இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.